www.Padasalai.Net www.TrbTnpsc.com

பள்ளிக் கல்வித்துறைக்காக
வெளியீடு:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

# தேன்சிட்டு

THEN CHITTU ★ FORTNIGHTLY ★

உலக அறிவுக்குத் தமிழ்ச் சாளரம்

6-9
வகுப்புகளுக்கான
மாதமிருமுறை இதழ்
• 16-31 டிசம்பர் 2023
• சிட்டு 3 ★ இதழ் 26
• விலை : ரூ. 10/-
• சென்னை

• 16-31 DECEMBER 2023
• Chittu 3 ★ Issue 26
• Price : Rs. 10/-
• Chennai


## கொண்டாட்டக் கோலாட்டம்






தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான இந்த நடனம் பற்றித் தெரிந்துகொள்ள **17**ஆம் பக்கம் வாங்க...


04 அதிகம் ஆசைப்படாதே!

10 பலூன் விளையாட்டு

20 வில் வித்தை போட்டி

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com


www.Padasalai.Net www.TrbTnpsc.com



# பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் மாணவர் உதவி மையம்




**மாணவர்களே! உங்களுக்கு ஆலோசனை வழங்கக் காத்திருக்கும் 14417 என்ற மாணவர் உதவி எண்ணிற்கு அழையுங்கள்!**



- உயர்கல்வி ஆலோசனை
- புகார்கள் /கேள்வி
- பாலியல் வன்முறை
- குழந்தைத் திருமணம் ஒழிப்பு
- குழந்தைகளுக்கு எதிரான வன்முறை
- குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு
- பள்ளி இடைநிற்றலைத் தவிர்ப்பதற்கான ஆலோசனை
- தேர்வு பற்றிய பயம், பதற்றம் மற்றும் மனச்சோர்வு
- கல்வி தகவல் மையம் (மதிப்பெண், மாற்றுச் சான்றிதழ், பாடப் புத்தகம், பள்ளி விடுமுறை போன்றவை)

**மாணவர்களே!**
பயிற்சி பெற்ற வல்லுநர்கள் ஆலோசனை தர காத்திருக்கிறார்கள்.



**குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைத் தடுப்போம்! குழந்தைகளைப் பாதுகாப்போம்!**
**குழந்தைகளுக்கான அவசர உதவி எண் 1098 க்கு அழைக்கவும்.**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



6ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரு தேன்சிட்டு இதழ்!



# பூனைக்குட்டி

வெள்ளை நிறத்துக் குட்டி
வேகம் மிகுந்த குட்டி
துள்ளி வருவாய் குட்டி
தூங்காதே பூனைக் குட்டி

சாம்பல் நிறத்துக் குட்டி
தாவி விழுந்த குட்டி
சோம்பல் இல்லாத குட்டி
துணிவுள்ள பூனைக் குட்டி

கறுப்பு நிறத்துக் குட்டி
கண்கள் பெருத்த குட்டி
வெறுப்பு மறந்த குட்டி
விளையாடும் பூனைக் குட்டி

எலியை விடுவாய் குட்டி
என்னிடம் வாடா குட்டி
புலியைப் போல்பாயும் குட்டி
பூனையில் செல்வக் குட்டி

– கனகம்
(இன்ப மொழி நூலில் இருந்து)

## உள்ளே...



சுவரை மின்விசிறி 5


வில்லி செய்த உதவி 8


நான் ஏலக்காய் பேசறேன் 16

மேடை பயம்

18

மோட்டார் மன்னன்

21



தேன்சிட்டு
Then Chittu Fortnightly

- 16 – 31 டிசம்பர் 2023
- சிட்டு 3 ★ இதழ் 26
- 16 – 31 December 2023
- Chittu 3 ★ Issue 26

பதிப்பாளர் / ஆசிரியர் :
செ. அமுதவல்லி

அச்சிட்டோர் :
பா. ராஜ்குமார்

அச்சகம் :
ராசி கிராபிக்ஸ் பிரைவேட் லிமிடெட்,
69-71/A, சிட்கோ தொழிற்பேட்டை,
திருமழிசை, திருவள்ளூர் மாவட்டம்,
பின் கோடு – 600 124.

பதிப்பகம்:
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.
ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
எண் 68, கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006

படைப்புகள் அனுப்ப : thenchittu@tnschools.gov.in
சந்தா குறித்த தகவல்களுக்கு: magazine.subscription@tnschools.gov.in


Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# அதிகம் ஆசைப்படாதே!



**காட்டிற்குச் சென்று தினமும் மரத்தை வெட்டிப் பிழைப்பு நடத்தும் ஒருவர் இருந்தார். ஒருநாள் பெரிய மரம் ஒன்றை வெட்டக் கோடரியை ஓங்கினார். அதே மரத்தில் வாழ்ந்துகொண்டிருந்த கிளி ஒன்று பறந்து வந்தது.**

"ஐயா, இந்த மரத்தை வெட்டாதீர். இதில்தான் எனது கூடு உள்ளது" என்றது.

"அதெல்லாம் முடியாது. நீ வேறு மரத்தைப் பார்த்துக்கொள்" என்றார் அவர்.

"போகலாம் தான், ஆனால் கொஞ்ச நாளில் நீங்கள் அங்கேயும் வந்துவிடுவீர்கள். அதனால்தான் கேட்கிறேன். இதை நீங்கள் வெட்டாமல் இருந்தால் தினப்படி உங்களுக்குத் தேவையானதைக் கொடுப்பேன்" என்றது கிளி.

"என்ன கொடுப்பாய்?"

"இம்மரத்தின் பழம் ஒன்றை தினமும் தருகிறேன். வீட்டிற்கு எடுத்துச் சென்று சாப்பிடுங்கள். அது உங்கள் குடும்பத்தின் பசியாற்றும்" என்றது கிளி.

இவரும் "சரி! எனக்கொரு பழம் பறித்துப்போடு" என்று கேட்டார்.

கிளி ஒரு பழத்தைப் பறித்துப் போட்டது. அவரும் பழத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று நறுக்கினார். என்ன அதிசயம், பழத்தில் ஒரு தங்கக்காசு இருந்தது. அதை விற்று, குடும்பத்திற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டார். கிளி வாயிலாக இப்படியே, தினமும் ஒரு தங்கக்காசு பெற்று சுகமாக வாழ்ந்து வந்தார்.

ஒருநாள், "இப்படி தினமும் ஒரு பழம், ஒரு தங்கக்காசு என்று பெறுவதைவிட, மரத்திலிருக்கும் மொத்தப் பழங்களையும் பறித்து வந்துவிட்டால் நிறைய தங்கக்காசுகள் கிடைக்குமே" என்று அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

அவரது மனைவியோ 'வேண்டாம்' என்று தடுத்தாள். அவளின் பேச்சைக் கேட்காமல், கிளி இல்லாத சமயம் பார்த்து, மரத்தில் இருந்த எல்லா பழங்களையும் பறித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

ரொம்பவும் சந்தோசமாகப் பழங்களை நறுக்கிப் பார்த்தார். உள்ளே கொட்டைகள்தான் இருந்தன. தங்கக்காசு எதுவுமில்லை. ஏமாற்றத்துடன் அடுத்த நாள் கிளியைக் காணச் சென்றார்.

"இனி, என்னால் உமக்குப் பழம் எதும் பறித்துத் தர முடியாது" என்றது கிளி.

இவரும் ஒன்றும் தெரியாதவர் போல, "ஏன் என்னாச்சு?" என்று கேட்டார்.

இந்த மரத்தில் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறைதான் காய் காய்க்கும். அது பழமாக மேலும் பல ஆண்டுகள் ஆகும். அப்படிப் பழுக்கும் பழத்தை நான் கொத்தி, சுவைத்துப் பார்த்தால் அதனுள் இருக்கும் கொட்டை தங்கக்காசாக மாறும். இதனை அறியாத எவனோ பேராசைக்காரன், எல்லா பழங்களையும் பறித்துச் சென்றுவிட்டான். பழம் இல்லாத இந்த மரத்தில் இனி நானும் குடியிருக்கப் போவதில்லை" என்றது.

இதனைக் கேட்டவர், ஓவென்று அழுதார். "அந்தப் பேராசைக்காரன் நான் தான்" என்று கதறினார்.

"உனக்கு நான் உதவினேன். நீயோ யாருக்கும் உதவ முடியாதபடி மரத்தையே அழித்துவிட்டாயே.. போ! போ!" என்ற கிளி, தன் பிள்ளைகளுடன் வேறு மரத்தைத் தேடிப் பறந்தது

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# கூரை மின்விசிறி

இன்று மின்விசிறியை (Ceiling Fan) அறியாதவர்கள் இருக்க முடியாது. அது எப்படி இயங்குகிறது என்பதை எளிமையாக அறிந்துகொள்வோம்.

## மோட்டார்

இது மின்விசிறியின் மிக முக்கியமான பாகம். இதில் இரண்டு அமைப்புகள் உள்ளன.

1. ஸ்டேட்டார் எனும் நிலையான அமைப்பு.
2. ரோட்டார் எனும் சுழலும் அமைப்பு.




- நாம் மின்விசிறியை இயக்க அதற்கான சுவிட்சைப் போட்டதும் மின்சாரம் மோட்டாரின் உள்ளிருக்கும் செம்புச் சுருள் கம்பிகளுக்குச் செல்கிறது. அப்படி செல்லும்போது அது காந்தப் புலத்தை உண்டாக்குகிறது. வடக்கில் இருந்து தெற்குக்கும், தெற்கில் இருந்து வடக்குக்கும் மாறும் இந்தக் காந்தப் புலம் ரோட்டாரில் மின்னியக்கு விசையை உண்டாக்குகிறது.

- ரோட்டார் ஒரு மின் கடத்தி. அது காந்தப்புலத்தில் படும்போது இயந்திர ஆற்றல் உருவாகிச் சுழலத் தொடங்குகிறது. ரோட்டார் மின்விசிறியின் வெளிப் பாகத்தோடு இணைக்கப்பட்டிருக்கும். அவை சுழலும்போது பிளேடுகளும் சுழல்கின்றன.

- உள்ளே பாய்வது மாறுதிசை மின்னோட்டம் (Alternating current) என்பதால் ஒவ்வொரு அரை சுழற்சிக்கும் திசை மாறும். நேர் சுழற்சியின்போது ரோட்டாரின் முறுக்கு விசை (Torque) வலது பக்கமாகவும், எதிர்மறை சுழற்சியின்போது இடது பக்கமாகவும் இருக்கும். நிலைமம் (Inertia) காரணமாக ரோட்டார் தன் திசையை மாற்ற முடியாது. எனவே மின்விசிறி நின்றுவிடக்கூடும். இதைத் தவிர்க்க மின்தேக்கி (Capacitor) உதவி புரிகிறது. முதன்மையான செம்புச் சுருளுக்கும், இரண்டாம் செம்புச் சுருளுக்கும் இடையே காந்தப்பாயத்தை (Magnetic Flux) உருவாக்கி ரோட்டார் நின்றுவிடாமல் சுழலச் செய்கிறது.

- மின்விசிறி காற்றின் இயக்கம் மற்றும் பாய்ம இயக்கவியல் (Fluid Dynamics) தத்துவத்தின் அடிப்படையில் வேலை செய்கிறது.

- பிளேடுகள் மோட்டாரோடு இணைக்கப்பட்டிருக்கும். மோட்டார் வேகத்துக்கு ஏற்ப இவை சுழலும். பிளேடுகள் சுழன்று காற்றைக் கீழ் நோக்கி அனுப்புகிறது. பிளேடுகளின் சுழற்சியால் காற்றின் வேகம் அதிகரிக்கும்போது வெப்பத்தின் அழுத்தம் குறைந்து குளிர்ச்சி ஏற்படுகிறது.

- பிளேடுகள் மின்விசிறியின் வடிவமைப்புக்கு ஏற்ப வெவ்வேறு அளவுகளில் உருவாக்கப்படுகின்றன.

தொகுப்பு : விஜய்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# நல்ல தமிழ் அறிவோம்



நாம் நம்மை அறியாமலேயே சில சொற்களைப் பிழையாகப் பயன்படுத்தி வருகிறோம். பிழையான சில சொற்களையும், அவற்றிற்கு என்ன திருத்தம் என்பதையும் தெரிந்து கொள்வோம்.

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| பாவக்காய் | – | பாகற்காய் |
| புட்டு | – | பிட்டு |
| மானிலம் | – | மாநிலம் |
| வல்லுனர் | – | வல்லுநர் |
| ஓட்டுனர் | – | ஓட்டுநர் |
| நடத்துனர் | – | நடத்துநர் |
| வெத்திலை | – | வெற்றிலை |
| அக்கரை | – | அக்கறை |
| நிலயம் | – | நிலையம் |
| சில்லரை | – | சில்லறை |
| வரட்சி | – | வறட்சி |
| சோம்பேரி | – | சோம்பேறி |
| தேனீர் | – | தேநீர் |
| நஞ்சை | – | நன்செய் |
| மணத்தக்காளி | – | மணித்தக்காளி |

# சொல்லுக்குள் சொல்!

இங்கே கொடுக்கப்பட்டுள்ள சொற்களின் எழுத்துகளை வைத்து புதிய சொற்களைக் கண்டுபிடிக்கலாம். நீங்கள் வேறு சொற்களில் இருந்து புதிய சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

1. கற்குவியல் - கல், வில், குவி, கல்வி, குவியல்
2. நெல்லிக்கனி – நெல், கனி, கல், கலி
3. கழுத்துமணி – கழுத்து, மணி, துணி, மத்து
4. வண்டிச்சக்கரம் – வண்டி, சக்கரம், கரம், வரம், சவரம், கடி
5. கதைப்பாடல் – கதை, பாடல், பால், பாதை, கல்
6. விடுதலை - விடு, தலை, விலை, தவிடு, தலைவி
7. மாநகரம் – மா, நகரம், நகம், கரம், ரகம்
8. புகைவண்டி - புகை, வண்டி, கை, புடி, வகை, வடி
9. மரகதம் – மரம், மதம், ரதம், மகரம், கரம்.
10. உருளைக்கிழங்கு – உருளை, கிழங்கு, கிழக்கு, உளை, கிளை, உருகி.



# தமிழ்ச்சொல் அறிவோம்

நாம் அன்றாடம் பயன்படுத்தும் சொற்களில், சில சொற்கள் தமிழ் மொழி அல்ல. தமிழ்ச் சொற்களைப் போலவே தெரியும். வடமொழிச் சொற்கள் சிலவற்றுக்குச் சரியான தமிழ்ச்சொற்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அகங்காரம், அகந்தை | - | செருக்கு, இறுமாப்பு |
| அகம்பாவம் | - | தற்பெருமை, செருக்கு |
| அகராதி | - | அகரவரிசை |
| அகிம்சை | - | இன்னாசெய்யாமை, கொல்லாமை |
| அகிலம் | - | உலகு, வையம், நிலம் |
| அக்கிரமம் | - | ஒழுங்கின்மை, முறைகேடு |
| அக்கினி | - | நெருப்பு, தீ, அனல், எரி, தழல் |
| அக்கினி நட்சத்திரம் | - | தீநாள் |
| அங்கம் | - | அடையாளம், உறுப்பு, எலும்பு |
| அங்குலம் | - | விரற்கடை, விரலளவு |

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 1. கண்டுபிடி


இந்தக் கட்டத்தில் உள்ள எழுத்துகளுக்குள், அருகில் உள்ள விலங்குகளின் பெயர்கள் ஒளிந்துள்ளன. கண்டுபிடி.



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| F | H | E | D | G | E | H | O | G | S | E |
| A | S | D | U | O | L | F | C | B | X | F |
| R | F | C | B | E | A | V | E | R | A | O |
| A | G | F | E | R | T | J | B | H | C | X |
| C | R | S | Q | U | I | R | R | E | L | A |
| C | N | Y | D | B | M | V | S | K | N | E |
| O | T | A | R | S | B | N | H | A | P | D |
| O | U | W | O | L | F | C | A | N | S | E |
| N | A | M | T | R | X | H | R | S | A | E |
| T | E | P | G | S | B | L | E | T | N | R |
| E | B | E | A | R | K | F | N | E | S | J |

# 2. தெரிகிறதா?

கலைந்து கிடக்கும் சொற்களை வைத்து கீழே உள்ள படங்களுக்கான பெயர்களைக் கண்டுபிடி!




# 3. உங்களுக்குத் தெரியுமா?

உலகில் மொத்தம் ஏழு கண்டங்கள் உள்ளன. அதில் ஐந்து கண்டங்களின் பெயர்கள் முதலெழுத்தும் கடைசியெழுத்தும் ஒரே எழுத்தாக இருக்கும் என்பதைக் கவனித்துள்ளீர்களா?



1. ASIA
2. AFRICA
3. EUROPE
4. AUSTRALIA
5. ANTARTICA

விடைகள் : 10ஆம் பக்கம்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# Lily's help

**Once upon a time in a little village, there lived a young girl named Lily. She had a special talent—she could talk to Birds and Animals.**

One sunny morning, as Lily walked to the village's bustling market, she noticed a group of sad-looking birds perched on a wire. They were chirping mournfully, and Lily could understand their distress.

Approaching them, Lily asked, "What's the matter, little birds?"

The birds explained that their nests had been blown away by a strong gust of wind, and they didn't know where to build new ones. Lily's heart went out to them.


With a determined spirit, Lily decided to help. She spent the entire day gathering twigs, leaves, and grass to create cozy nests for the birds. As the sun dipped below the horizon, she placed the new nests high in the trees.

The next morning, the birds were overjoyed when they saw the new nests. They chirped happily, singing songs of gratitude to Lily. Word of her kindness spread through the village.

Soon, animals of all kinds came to Lily seeking help. She assisted squirrels in finding their lost acorns, helped a lost dog reunite with its owner, and even guided a lost butterfly back to its garden.

Lily's extraordinary gift not only made her the village's hero but also taught everyone the importance of compassion and kindness to all creatures, big and small. And so, in that little village, the girl who could talk to animals became a beloved friend to all, proving that even the smallest acts of kindness could make a world of difference.

- Afrin



# லில்லி செய்த உதவி

**முன்பொரு காலத்தில் ஒரு கிராமத்தில் லில்லி என்ற சிறுமி வாழ்ந்து வந்தாள். அவளுக்குப் பறவை, விலங்குகளின் மொழி தெரியும்.**

அவள் ஒரு கோடைக் கால காலை நேரத்தில் அந்த ஊரின் இரைச்சலான கடைத்தெருவுக்குள் நடந்து சென்றாள். அங்கே ஒரு கம்பியின் மீது சில பறவைகள் சோகமாக அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவை துயரத்துடன் கீச்சொலி எழுப்பிக் கொண்டிருந்தன. அந்தப் பறவைகளின் துயரத்தை உணர்ந்த லில்லி அவற்றிடம் சென்று "சிறு பறவைகளே, என்ன விஷயம்?" என்று கேட்டாள்.



அப்பறவைகளின் கூடுகள் பலமான சூரைக் காற்றில் பறந்து போய்விட்டன. மீண்டும் எங்கே கூடு கட்டுவது என்று அப்பறவைகளுக்குக் குழப்பம். இதை அறிந்த லில்லிக்கு அப்பறவைகளின் மீது இரக்கம் தோன்றியது.

லில்லி அப்பறவைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்தாள். நாள் முழுவதும் அவை கூடு கட்டத் தேவையான சுள்ளிகள், இலைகள், புற்கள் போன்றவற்றைச் சேகரிக்க உதவினாள். சூரியன் மேற்கு வானில் மறையும் நேரத்தில் மரத்தின் உயரமான கிளைகளில் அந்தக் கூடுகளைப் பொருத்தினாள்.

மறுநாள் காலையில் அப்பறவைகள் தங்களது புதிய கூடுகளைக் கண்டு ஆனந்தம் அடைந்தன. மகிழ்ச்சியோடும், லில்லியின் மேல் நன்றியோடும் பாடியபடிச் சுற்றி வந்தன. லில்லியின் இந்த நற்செயல் பற்றிய செய்தி கிராமம் முழுக்கப் பரவியது.

விரைவில் எல்லா விலங்குகளும் லில்லியிடம் உதவி கேட்டு வரத் தொடங்கின. அவளும் அணில்களுக்குக் கருவாலிக் கொட்டைகளைக் கண்டுபிடித்துத் தருவது, காணாமல் போன நாயை உரிமையாளருக்குக் கண்டுபிடித்துத் தருவது போன்ற உதவிகளைச் சளைக்காமல் செய்து வந்தாள். வழி தவறிய ஒரு அழகிய பட்டாம்பூச்சியைக் கூட அதன் தோட்டத்திற்குத் திரும்பிச்செல்ல உதவினாள்.

லில்லியின் இத்தகைய செயல்கள் அவளை அந்தக் கிராமத்தின் கதாநாயகியாக மாற்றியது. அது மட்டுமல்லாது, அனைவருக்கும் எல்லா உயிர்களின் மீதும் கருணை கொள்வதன் அவசியத்தைப் புரிய வைத்தது. ஒரு சிற்றூரில் இருந்த விலங்குகளோடு பேசத் தெரிந்த அந்தச் சிறுமி, அனைவருக்கும் நட்புக்குரியவளாக மாறினாள். சிறிய அன்பான செய்கை கூட இந்தப் பெரிய உலகில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் என்பதற்கு அவளது வாழ்க்கையே உதாரணம்.

கதை : அஃப்ரின்
தமிழில் : கனியன்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# தலையில் இதயமா?



ஆம்! இறால் மீனின் இதயம் அதன் தலையில் அமைந்துள்ளது. இறாலின் உடல் உறுப்புகளில் தலை மற்றும் மார்புப் பகுதி தடிமனாக இருக்கும். செஃபாலிக் (Cephalic) எனக் கூறப்படும் இப்பகுதியானது எக்ஸோஸ்கெலட்டன் (Exoskeleton) எனப்படும் தடிமனான பொருளால் பாதுகாக்கப்பட்டுள்ளது. எதிரிகளிடமிருந்து இதயத்தைப் பாதுகாக்கவே இறாலின் இதயம் இப்பகுதியில் உள்ளது. உயிர் வாழ்வதற்கான பரிணாம வளர்ச்சியில் இறாலின் உடல் தகவமைத்துக் கொண்டுள்ளது.

## வானவில்லை இரசிக்க உலகின் சிறந்த இடம் எங்கே உள்ளது?

உலகில் வானவில்லின் அழகை முழுமையாக இரசிக்க வேண்டும் என்றால் அமெரிக்காவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹவாய் மாகாணத்திற்குத்தான் செல்ல வேண்டும். இப்பகுதியில்தான் முழுமையான வானவில்லை காண முடியும். கடந்த ஆண்டுகளில் அமெரிக்க வானிலை ஆய்வு மையத்தால் நடத்தப்பட்ட ஆய்வில், ஹவாய் பகுதியில் உள்ள மலைகள் மழைப்பொழிவுகளில் கூர்மையான சாய்வுகளை உருவாக்குகின்றன. இதன் காரணமாக இங்கு தெளிவான வானவில் தோன்றுவதாகத் தெரியவந்துள்ளது.






## யானைகளால் குதிக்க முடியாதது ஏன்?

மற்ற விலங்குகளைப் போல் யானைகளால் மட்டும் குதிக்க முடியாது. ஏனெனில் அவற்றின் கால்களின் தசைகள் மிகவும் பலவீனமானவை ஆகும். யானையின் கணுக்கால் மற்ற விலங்குகளைப் போல் வளையக் கூடியதாக இல்லை. மேலும், யானையின் உடல் எடையும் அதிகம்.



## அதிக வயதான மரம் எது?

கடுமையான பாலைவனமான ஆல்பைன் பாலைவனத்தில் உள்ள 'கிரேட் பேசின் ப்ரிஸ்டில்கோன்' என்ற பைன் மரமே உலகின் அதிக வயதான மரம். இதன் வயது சுமார் 5 ஆயிரம் ஆண்டுகள் இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.




உங்களின் கேள்விகளை அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள்.

முகவரி : 'அறிவோம் ஆயிரம்', 'தேன்சிட்டு' சிறார் இதழ்
8ஆவது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை,
சென்னை - 600 006. மின்னஞ்சல்: thenchittu@tnschools.gov.in

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# பலூன் விளையாட்டு

**தேவையான பொருட்கள்:**

- காலியான தண்ணீர் பாட்டில்
- ஒரு பலூன்
- இரும்பு கோலிக் குண்டு


**செய்முறை:**

1. முதலில் பலூனில் கோலிக்குண்டை நுழைத்து உள்ளே தள்ள வேண்டும்.
2. பின்னர் பலூனைச் சிறிதளவு ஊதிக்கொள்ள வேண்டும்.
3. அதன் பின்னர் பலூனின் வாய்ப் பகுதியில் முடிச்சு போட்டுக்கொள்ள வேண்டும்.
4. அந்த பலூனைத் தண்ணீர் நிரப்பிய பாத்திரத்தில் போடவும்.
5. பலூன் மிதப்பதைக் காணலாம்.
6. இப்போது அதே பலூனைத் தண்ணீர் பாதி அளவில் நிரப்பிய பாட்டிலில் அழுத்தி உள்ளே தள்ளிவிட வேண்டும்.
7. அந்த பாட்டில் முழுவதும் தண்ணீரை நிரப்பிக் கொள்ளவும்.
8. பின்னர் அந்த பாட்டிலை மூடியால் இறுக்கி மூடவும்.
9. தற்போது பாட்டிலின் நடுப்பகுதியை அழுத்தி விடவும்.
10. பாட்டிலில் உள்ளே இருக்கும் பலூன் மேலும், கீழும் செல்வதைக் காணலாம்.
































https://www.arvindguptatoys.com/toys/Shrinkandsink.html

உங்களின் தகவல்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்

**மாணவர்களே!**
உங்களுக்கு எதற்காவது அச்சமா?
உங்களுக்குப் பாதுகாப்பில்லை என்று உணர்கிறீர்களா?
உங்களைப் பாலியல் ரீதியாக யாரும் துன்புறுத்துகிறார்களா?
தேர்வு மற்றும் உயர்கல்வி பற்றிய வழிகாட்டுதல் தேவையா?

பள்ளிக் கல்வித் துறையின் மாணவர் உதவி எண்

நம்பிக்கையுடன் இந்த இலவச உதவி மையத்தை உடனடியாக உதவிக்கு அழைக்கலாம்

**14417**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## 1. சரியானவற்றைக் கண்டுபிடி!

### தமிழ்நாட்டின் மாநிலச் சின்னங்கள் எவை?

தமிழ்நாட்டில் இலச்சினையில் இருக்கும் கோபுரம் ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் என்பது நமக்குத் தெரியும். அதுபோல சில சின்னங்கள் உள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சரியானவற்றைக் கண்டுபிடியுங்கள்.





















- கு. கேத்ரினா, 6ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, கல்குணம்,
குறிஞ்சிப்பாடி வட்டம், கடலூர்.

## 2. எது வேறுபட்ட எண்?

இந்தக் கட்டத்தில் உள்ள எண்களில் ஒன்று மட்டும் பொருந்தாமல் உள்ளது. அது எது?

| | | | |
|---|---|---|---|
| 3 | 33 | 15 | 36 |
| 12 | 27 | 34 | 18 |
| 72 | 39 | 30 | 6 |
| 24 | 21 | 9 | 42 |


## 3. எத்தனைப் பழங்கள்?

அந்தோணியும் அக்பரும் நண்பர்கள். இருவரும் இன்னொரு நண்பனான ஆறுமுகத்தைத் தேடி அவனது கொய்யாத் தோப்பிற்குச் சென்றனர். பேசிவிட்டுக் கிளம்பும்போது, ஆறுமுகத்தின் ஒப்புதலோடு ஆளுக்குக் கொஞ்சம் கொய்யாப் பழங்களைப் பறித்துக்கொண்டு திரும்பினார்கள். அப்பொழுது அந்தோணி கூறினான். "என்னிடம் இருக்கும் பழங்களில் ஒன்றை உனக்குக் கொடுத்துவிட்டால் நாம் இருவரிடமும் சமமான எண்ணிக்கையில் பழங்கள் இருக்கும். அதே நேரம் உன்னிடம் இருப்பதில் ஒன்றை நீ எனக்குக் கொடுத்துவிட்டால், உன்னிடம் இருப்பதைவிட என்னிடம் இருமடங்காக இருக்கும்!" என்றான்.

அக்பரும் 'ஆம்' எனத் தலையை ஆட்டிச் சிரித்துக்கொண்டே நடந்தான்.

அப்படியெனில் அவர்களிடம் தலா எவ்வளவு கொய்யாப் பழங்கள் இருந்தன?

## 4. ஆறு வித்தியாசங்கள் கண்டுபிடி!



விடைகள் : 16ஆம் பக்கம் காண்க


www.Padasalai.Net www.TrbTnpsc.com
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com






# மாணவர் கை




**எம். முத்துமாரி,** 6ஆம் வகுப்பு.
அரசு உயர்நிலைப் பள்ளி, தருவை,
திருநெல்வேலி



**எஸ். கனிஷ்கா.** 6ஆம் வகுப்பு.
தசைத்திறன் குறைபாடு உள்ளோர்க்கான சென்னை
சிறப்புப் பள்ளி, ஆயிரம்விளக்கு, சென்னை.




**லெ.ஷாம்னா,** 9ஆம் வகுப்பு.
அரசு உயர்நிலைப் பள்ளி,
சன்னாநல்லூர், திருவாரூர்.



**செ. டிவிதா,** 8ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
பீமந்தோப்பு, பூண்டி, திருவள்ளூர்.



**அ. திவ்யா,** 9ஆம் வகுப்பு.
அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளி,
மண்ணச்சநல்லூர், திருச்சி



**சி. நேத்ராஸ்ரீ,** 7ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
சிடுவம்பட்டி, தருமபுரி.




**ஆர். ரோஸ்லின்,** 7ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
தாழையூத்து, திருநெல்வேலி.



**வெ. வர்ஷினி,** 7ஆம் வகுப்பு.
அரசு மேல்நிலைப்பள்ளி,
வெலக்கல்நத்தம், திருப்பத்தூர்.



**ரெ. அமுதன்,** 9ஆம் வகுப்பு.
அரசு உயர்நிலைப்பள்ளி,
கொளத்தூர், பெரம்பலூர்.



**ஐ. கோகுலலட்சுமி.**
8ஆம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி,
அகூர், விழுப்புரம்.



**சு.மனோரஞ்சிதம்,** 7ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
குப்பனூர், அயோத்தியாபட்டணம், சேலம்.




**டி. வீரராஜ்,** 6 ஆம் வகுப்பு.
அரசு உயர்நிலைப்பள்ளி கீரனூர்,
இராமநாதபுரம்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# லைவண்ணம்







**மு. முனிச்செல்வி,** 8ஆம் வகுப்பு.
சே.சே.அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி. இராஜபாளையம். விருதுநகர்.





**ஆ. வினோதினி,** 8ஆம் வகுப்பு.
அரசு உயர்நிலைப் பள்ளி.
முள்ளிமலை. நீலகிரி






**வி. கபிலேஷ்,** 8ஆம் வகுப்பு.
அரசு மேல்நிலைப் பள்ளி.
தளவாய்பட்டணம். திருப்பூர்.





**கே.ருதிவைஷ்ணவி,** 8ஆம் வகுப்பு.
ராணியார் பெண்கள் அரசு உயர்நிலைப்பள்ளி. புதுக்கோட்டை.





**ரா. ரக்ஷனா,** 8ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி.
அசோக்நகர். புதுக்கோட்டை.





**இரா. நிகிஷா,** 8ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
கொங்கன்செரு. பர்கூர். கிருஷ்ணகிரி.






**பி.பிரகாஷ்,** 8 ஆம் வகுப்பு.
அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி
மணலூர்பேட்டை. கள்ளக்குறிச்சி






**மு. அனுஸ்கா,** 8ஆம் வகுப்பு.
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி.
குடியூர். பரமக்குடி. இராமநாதபுரம்.





**பா. மகா விக்னேஸ்வரன்,** 8ஆம் வகுப்பு.
நகர்மன்ற பெருமாள்பட்டி நடுநிலைப்பள்ளி.
ஸ்ரீவில்லிபுத்தூர். விருதுநகர்





**த.தர்ஷன்,** 7ஆம் வகுப்பு
மாநகராட்சி நடுநிலைப் பள்ளி.
பாலமுருகன் நகர். திருப்பூர்.

**படைப்புகளை அனுப்பும் மாணவர்கள் தங்களின் பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், பள்ளி முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், மாவட்டம், தொலைபேசி எண் போன்ற விவரங்களையும் மறக்காமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டுகிறோம்.**

முகவரி : 'மாணவர் கலைவண்ணம்', **'தேன்சிட்டு' சிறார் இதழ்**
8வது தளம், ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை – 600 006. மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாயக் கண்ணாடி



ஒரு காலத்தில் கிராமம் ஒன்றில் நிறைய நண்பர்கள் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று வேகமாகக் காற்று வீசியது. அக்காற்று அவர்களை அப்படியே அள்ளிச்சென்று ஓர் இடத்தில் இறக்கிவிட்டது.

எல்லாரும் அங்கே இருந்த ஒரு வீட்டிற்குச் சென்றனர். மெதுவாக ஜன்னலின் வழியே எட்டிப் பார்த்தனர். மேசையில் விதவிதமான உணவுகள் இருந்தன.

திடீரென்று, கதவு மாயமாய்த் திறந்தது. உள்ளே யாரோ அழைப்பது போலக் கேட்டது. "வாருங்கள்! நீங்கள் பசியோடு இருப்பீர்கள். உள்ளே வந்து சாப்பிடுங்கள்."

சாம் யோசித்தான். "வேண்டாம்டா. நாம இந்த உணவைச் சாப்பிடக் கூடாது" என்று தன் நண்பர்களிடம் கூறினான்.

"ஆனால் மிகவும் பசிக்கிறதே!" என்ற அவர்கள் அந்த உணவை வேகமாகச் சாப்பிடத் தொடங்கினர்.

அந்த உணவில் கையை வைக்கப் போன தன் தங்கையைத் தடுத்தான் சாம்.

"சோயா, நம்முடைய அப்பா, அம்மா சொன்னதை ஞாபகப்படுத்திப் பார். முன்பின் அறிமுகமில்லாதவர் கொடுக்கும் எதையும் உண்ணக்கூடாது என்றார்களே. இதுவும் அறிமுகமில்லாதவர் வீடுதானே? கொஞ்சம் பொறுத்துக்கொள். நாம் வீட்டுக்குச் சென்றதும் சாப்பிடலாம்" என்றான்.

அப்போதுதான், அவர்கள் கவனித்தார்கள். அந்த உணவை உட்கொண்ட தங்கள் நண்பர்கள் அரக்கர்களாக மாறியிருப்பதைப் பார்த்தார்கள்! சாம் சோயாவின் கையைப் பிடித்துக்கொண்டு காட்டுக்குள் ஓடினான்.

வீட்டின் உள்ளே ஒரு சூனியக்காரி தோன்றினாள்.

அரக்கர்களை எண்ணிப் பார்த்தாள். "அந்த இரண்டு பிள்ளைகள் எங்கே?" என்று அவள் கத்தினாள். பின்னர் அவர்களை அங்கேயே கட்டிப் போட்டுவிட்டு, சாமையும் சோயாவையும் தேடிக் காட்டுக்குள் பறந்தாள்.

காட்டுக்குள் ஓடிய சாமும் சோயாவும் எங்கேயாவது மறைந்துகொள்ள இடத்தைத் தேடினார்கள்.

ஒரு பெரிய வெள்ளை எலி எதிர்ப்பட்டது. "நீங்கள் மறைந்துகொள்ள நான் உதவுகிறேன்; என் வளைக்கு வாருங்கள்" என்ற எலி, இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றது.

"சூனியக்காரியின் வீட்டிற்குள் இருந்த உணவைச் சாப்பிடாதது நீங்கள் செய்த புத்திசாலித்தனம்" என்றது வெள்ளை எலி.

"உணவைச் சாப்பிட்ட எங்கள் நண்பர்களை எப்படிக் காப்பாற்றுவது?" என்று சாம் கேட்டான்.

"அதற்கு ஒரு வழி உள்ளது" என்றது எலி.

"அப்படியா? என்ன வழி அது?"

"தொலைவில் ஒரு மர்மமான ஒரு கோவில் உள்ளது. அங்கு இருக்கிற மாயக் கண்ணாடியை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதை எடுத்துவந்து அதன் மீது விழும் சூரிய ஒளியை உங்கள் நண்பர்களின் மீது காட்டி விழச் செய்தால் அவர்கள் மீண்டும் மனிதர்களாக மாறுவார்கள்" என்றது வெள்ளை எலி.

அண்ணனும் தங்கையும் கிளம்பினர். அப்போது சாம், "சோயா, நீ கிராமத்திற்குப் போ. அங்கு நம் நண்பர்களுக்கு என்ன நடந்தது என்று எல்லோருக்கும் சொல். நான் கிழக்கு வழி பார்த்துப் போகிறேன் கண்ணாடியைக் கண்டுபிடிக்க" என்றான்.

அவளும் சரியெனச் சொல்ல, இருவரும் ஆளுக்கொரு பக்கம் பிரிந்து சென்றனர்.

நடந்து செல்லும்போது பாறைகளுக்கு நடுவில் ஒடும் ஓர் ஓடையை எதிர்கொண்டான் சாம். அதில் ஒரு பாறை இடுக்கில் ஒரு குட்டிக் கழுகு போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

அதற்கு உதவலாமா என்று அவன் எண்ணிக் கொண்டிருக்கும்போதே அவனுக்குப் பின்னால் மிகப்பெரிய கழுகு ஒன்று தோன்றியது.

(சாமிற்கு என்ன நேர்ந்தது? நண்பர்களைக் காப்பாற்றினானா? என்பதை அறிய இக்கதையை நீங்கள் முழுமையாக வாசிக்கவேண்டும்.)

முழுக் கதையையும் வாசிக்க இந்த கியூ.ஆர். கோடை ஸ்கேன் செய்க.

இந்தோனேசிய மொழியில்: நின் வோர்ந்தகொண்ட கின்
ஆங்கிலத்தில்: மந்தனோ வைல்
தமிழில்: மாயோன்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com



# எங்க ஊரு திருப்பூர்



**திருப்பூர் என்றாலே உழைப்புக்குப் பெயர் போனது. நான் வசிப்பதும் திருப்பூரில்தான். பழங்காலத்தில் திருப்பையூர் என்று இருந்தது; பேச்சு வழக்கில் திருப்பூர் என்று ஆனதாகக் கூறப்படுகிறது.**

வெள்ளையர்களால் நம் நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம் அது. அந்நியரை எதிர்த்துப் போராடியவர்களில் குறிப்பிடத் தகுந்தவர் குமரன். போராட்டத்தில் இருந்த அவரை காவலர்கள் கடுமையாகத் தாக்கினர். அவர் இறக்கும்வரை நம் நாட்டுக் கொடியைத் தன் கரங்களில் தாங்கியிருந்தார். அதனால், 'கொடிகாத்த குமரன்' என்று போற்றப்படுகிறார். அவர் வாழ்ந்த ஊர் திருப்பூர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்த திருப்பூர், 2009ஆம் ஆண்டு முதல் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. இந்நகரின் வளர்ச்சி என்பது இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்தது என்றால் மிகையில்லை.

பின்னலாடை உற்பத்தியில் ஈடில்லா வளர்ச்சியைக் காட்டி வருகிறது திருப்பூர். தமிழ்நாட்டில் வேகமாக வளர்ந்துவரும் தொழில் நகரங்களில் இது முக்கியமானது.

மாநிலத்தின் ஏழாவது பெரிய நகரமான இங்கு, சுமார் 20 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருக்கும் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பை அள்ளி வழங்கும் நகரம் இது.


நம் நாட்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகிறது. அதனால் இது 'டாலர் சிட்டி' என்றும் அழைக்கப்படுகிறது.

திருப்பூர் நகரில் சிவன்மலை, 7ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அவினாசியப்பர் கோயில், சித்தம்பலம் நவகிரகக் கோட்டை, திருப்பூர் திருப்பதி, பழமை வாய்ந்த சுக்ரீஸ்வரர் கோயில், நஞ்சராயன் குளம், ஆண்டிபாளையம் ஏரி போன்றவை உள்ளன.

உடுமலை பஞ்சலிங்க அருவி, திருமூர்த்திமலை, திருமூர்த்தி அணை, அமராவதி முதலைப் பண்ணை, அமராவதி அணை போன்ற சுற்றுலா தலங்களும் திருப்பூரைச் சுற்றி உள்ளன. எங்கள் ஊரில் பாயும் நொய்யல் நதியும் புகழ்பெற்றதே.

வெண்ணெய்க்குப் புகழ்பெற்ற ஊத்துக்குளி எங்கள் ஊரின் அருகில்தான் உள்ளது. அந்த ஊருக்குள் நுழைந்தாலே வெண்ணெய் மணம் கமகமக்கும்.

நீங்களும் திருப்பூருக்கு வந்து ஆடைகளை வாங்கிக்கொண்டு மகிழ்வாகச் செல்லுங்கள்.



– சு. சஷ்வந்த்,
7ஆம் வகுப்பு, நகராட்சி நடுநிலைப் பள்ளி, பாரப்பாளையம், திருப்பூர் தெற்கு


www.Padasalai.Net www.TrbTnpsc.com





# நான் ஏலக்காய் பேசறேன்





**என் பெயர் ஏலக்காய். என்னை 'நறுமணப் பொருள்களின் ராணி' என்று அழைப்பார்கள். என் பிறப்பிடம் தென்னிந்தியா.**

தென்னிந்திய சமையல் உணவு வகைகளில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளேன்.

பண்டைய காலத்தில் எகிப்தியர்கள் பற்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், மூச்சுக்காற்று நறுமணத்துடன் இருக்கவும் என்னைப் பயன்படுத்தினார்கள் என்ற வரலாற்றுத் தகவல் உண்டு.

குவாத்தமாலா குடியரசு என்னை அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதன்மையானதாக இருக்கிறது.

ஒரு ஆண்டுக்கு 2 கோடியே 30 லட்சம் கிலோ ஏலக்காயை உற்பத்தி செய்கிறது குவாத்தமாலா.

என்னில் மருத்துவக் குணம் அதிகமுள்ளதால் மருத்துவப் பலன்களுக்காகவும் என்னை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

என்னில் உள்ள உயிர் வளியேற்ற எதிர்ப்பொருள் (Anti-oxidant) இரத்த அழுத்தம் குறைய உதவும். திசுக்கள் சிதைவைத் தடுக்கும் என்று கூறப்படுகிறது.

கேன்சர் எதிர்ப்புக்குத் தேவையான நொதிகள் (Enzymes) என்னிடம் உள்ளன.

வயிற்றுப் புண், செரிமானப் பிரச்சினைகளைச் சரி செய்ய உதவுவேன்.

பற்சொத்தையில் இருந்து பாதுகாப்பு அளிப்பேன், வாய் துர்நாற்றத்தைப் போக்க உதவுவேன்.

சுவாசத்தையும், மூச்சுக்காற்றின் பயனையும் மேம்படுத்த உதவி செய்வேன்.

உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் என்னை எடுத்துக்கொள்வது மிகவும் நல்லது எனப் பரிந்துரை செய்யப்படுகிறேன்.

## சுவாரசியங்கள்

- ஏலக்காய் இஞ்சியின் குடும்பத்தைச் சேர்ந்தது.
- உலகளவில் ஏற்றுமதி செய்யப்படும் மசாலா பொருட்களில் ஏலக்காய் மூன்று சதவிகிதம் பங்கு வகிக்கிறது.
- ஏலக்காயில் பச்சை ஏலக்காய், கறுப்பு ஏலக்காய் என இருவகை உண்டு.

தொகுப்பு : அருண்

## 7ஆம் பக்க விடைகள்

1. கண்டுபிடி

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| F | H | E | D | G | E | H | O | G | S | E |
| A | S | D | U | O | L | F | C | B | X | F |
| R | F | C | B | E | A | V | E | R | A | O |
| A | G | F | E | R | T | J | B | H | C | X |
| C | R | S | Q | U | I | R | R | E | L | A |
| C | N | Y | D | B | M | V | S | K | N | E |
| O | T | A | R | S | B | N | H | A | P | D |
| O | U | W | O | L | F | C | A | N | S | E |
| N | A | M | T | R | X | H | R | S | A | E |
| T | E | P | G | S | B | L | E | T | N | R |
| E | B | E | A | R | K | F | N | E | S | J |

2.தெரிகிறதா?


SPIDER,
MOSQUITO,
GRASSHOPPER,
LADYBUG,
BUTTERFLY

## 11ஆம் பக்க விடைகள்

1. சரியானவற்றைக் கண்டுபிடி
   1. அ. விலங்கு - வரையாடு, 2. ஆ. பறவை - மரகதப் புறா,
   3. அ. மலர் - செங்காந்தள், 4. ஆ. மரம் - பனை மரம்,
   5. ஆ. பழம் - பலாப்பழம், 6. ஆ. பூச்சி - தமிழ்மறவன் பட்டாம்பூச்சி
2. எது வேறுபட்ட எண்?
   34. அது மட்டுமே 3ஆல் வகுக்க முடியாத எண்.

3.எத்தனைப் பழங்கள்?
அந்தோணி- 7, அக்பர் -5

4. ஆறு வித்தியாசங்கள்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# கண்ணைக் கவரும் கோலாட்டம்

தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகளில் ஒன்று கோலாட்டம். பல விதமான கொண்டாட்ட நிகழ்வுகளில் கோல்களைப் பிடித்து தனியாகவோ, இணைந்தோ ஆடும் ஆட்டம் கோலாட்டம் ஆகும். இந்த ஆட்டத்திற்கு அலங்கரிக்கப்பட்ட கோல்கள் பயன்படுத்தப்படுகின்றன.



கோலாட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்தில் களியல், களியலாட்டம் எனவும், தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளில் கிட்டியாட்டம் எனவும், திருச்சி மாவட்டத்தில் வைந்தானை ஆட்டம் எனவும் அழைக்கின்றனர்.

கோலாட்டத்தில் பின்னல் கோலாட்டம், கோலாட்டக்கும்மி, கோலாட்டம் ஆகிய மூன்று வகைகள் உள்ளன. எட்டுக்கும் அதிகமான நபர்கள் இணைந்து கோலாட்டம் ஆடுவதைப் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.

தமிழ்நாட்டில் இருக்கும் நாட்டார் தெய்வங்களின் திருவிழாக்களின்போது கும்மிக்கோலாட்டம் நடைபெறுவது வழக்கம். தற்காலங்களில் பள்ளி, கல்லூரி எனப் பல இடங்களில் கொண்டாட்ட நிகழ்வின்போது கோலாட்டம் ஆடப்படுகிறது.

பழங்குடி மக்கள் கோலாட்டத்திற்குத் தேவையான கோல்களை கொரண்டி, கன்னங்கயிஞ்சி, சீதவெற்றம் ஆகிய மரங்களில் இருந்து எடுக்கப்பட்ட கட்டைகளில் தயார் செய்வார்களாம்.

பின்னல் கோலாட்டம் வகையில், பல வண்ணத் துணிகளை உயரத்தில் தொங்க விட்டிருப்பார்கள். அதை வைத்து இசைக்கு ஏற்ப ஆடி துணிகளைப் பின்னல் போலச் சுற்றுவார்கள். இது காண்போரைக் கவரும் வகையில் இருக்கும்.

இதே கோலாட்டம் வட மாநிலப் பகுதிகளில் ஒரு சில மாறுபாடுகளுடன் 'தாண்டியா' என்ற ஆட்டமாக உள்ளது. விழாக்களின்போது இந்த ஆட்டம் ஆடப்படுகிறது.

கோலாட்டம் ஆடும் கலைஞர்களுக்கு எனத் தனி ஒப்பனை மற்றும் ஆடைகள் என ஏதும் நிர்ணயிக்கப்படுவதில்லை. பெரும்பாலும் ஆண்கள் தலையில் ரிப்பனைக் கட்டிக்கொண்டு ஆடுவது வழக்கமாகும்.

கோலாட்டத்தின்போது ஆர்மோனியம், மத்தளம், ஜால்ரா, பேண்டு வாத்தியங்கள், தவில், குந்தளம் எனப் பல இசைக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

கோலாட்டம் ஆடும்போது மனம், உடல் ஆகிய இரண்டையும் சமமாக வைத்து ஆட வேண்டும். இதுவே சிறந்த பயிற்சியாகும்.

தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்ட கோலாட்டம் பல அரசு விழாக்களிலும் நடைபெறுகிறது.

தொகுப்பு : சுகுணா

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com








Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




















இது இலவச தொலைபேசி எண்
இரவு - பகல் எந்த நேரமும் அழைக்கலாம்
உங்களுக்கு என்ன உதவி தேவை என்றாலும்
இந்த எண்ணிற்கு அழையுங்கள்

சைல்டு லைன்
1098
(குழந்தைகள் பாதுகாப்பு உதவி மையம்)

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com




# வில் வித்தை போட்டி

**வில் வித்தை பல்லாயிரம் ஆண்டுகள் பழமையானது. ஆதி மனிதன் நெருப்பையும் சக்கரத்தையும் கண்டுபிடித்ததோடு ஒப்பிடக்கூடிய முக்கியமானது வில். பழங்காலத்தில் வேட்டையாட வில்- அம்பையே பயன்படுத்தினர்.**

எகிப்தியர்கள், சீனர்கள் மிக நீண்ட காலமாக வில் வித்தையை விளையாட்டாக ஆடி வருகின்றனர். ஒலிம்பிக் போட்டியில் முதன்முதலாக 1900ஆம் ஆண்டு வில் வித்தை போட்டி இடம் பெற்றது. தொடர்ந்து 1904, 1908, 1920ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளிலும் இவ்விளையாட்டு இடம்பெற்றது. பிறகு, சில நாடுகளில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஒலிம்பிக் போட்டியில் இருந்து வில் வித்தை விலக்கப்பட்டது.


1931ஆம் ஆண்டு ஸ்விட்சர்லாந்து நாட்டில் உலக வில் வித்தை கூட்டமைப்பு தொடங்கப்பட்டது. ஒலிம்பிக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இக்கூட்டமைப்பில் 159 தேசிய வில் வித்தை கூட்டமைப்புகள் அங்கம் வகிக்கின்றன.

வில் வித்தைப் போட்டிக்கான விதிமுறைகள் வகுக்கப்பட்டு, 1972ஆம் ஆண்டு மீண்டும் ஒலிம்பிக்கில் வில் வித்தை போட்டி சேர்க்கப்பட்டது. போட்டிக்கு ரீகர்வ், காம்பவுண்ட் என இரு வகையான வில்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதைப் பொறுத்து ஆட்டத்தில் சில மாற்றங்கள் இருக்கும்.



### புள்ளிகள்

மஞ்சள், சிவப்பு, நீலம், கறுப்பு, வெள்ளை என ஐந்து வண்ணங்களை உள்ளடக்கிய போர்டு இலக்காக நிர்ணயிக்கப்படும். ஒவ்வொரு நிறத்துக்கும் 2 வளையங்கள் போடப்பட்டிருக்கும். புள்ளிகளைச் சேகரிக்க மொத்தம் 10 வளையங்கள்.



### விதிமுறைகள்

- தகுதி ஆட்டத்தில் ஒவ்வொரு வில்லாளரும் 72 அம்புகள் எய்த வேண்டும். அதில் எடுக்கும் புள்ளிகளின் அடிப்படையில் போட்டி ஆட்டத்துக்குத் தேர்வு செய்யப்படுவர்.
- மூன்று அம்புகளை எய்வதற்கு அதிகபட்சமாக இரண்டு நிமிடமும், ஆறு அம்புகளுக்கு நான்கு நிமிடமும் வழங்கப்படுகிறது.
- நடுவர் சிக்னல் கொடுக்கும் முன்பு அம்பை உயர்த்தக்கூடாது.
- கொடுக்கப்படும் வில்லின் அளவும் புள்ளிகளும் போட்டிக்கு ஏற்ப மாறுபடும்.
- ஒலிம்பிக் போட்டிகளில் ரீகர்வ் வில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### 3 ஆட்ட வகைகள்

**இலக்கு வில் வித்தை:** குறிப்பிட்ட நிலையான தூரத்தில் இலக்கு இருக்கும். வில்லுக்கு ஏற்ப தூரம் மாறுபடும்.

**உள்ளரங்க வில் வித்தை:** குறைந்த தூரத்தில் இலக்கு இருக்கும். பொதுவாக 18 மீட்டர். அதைத் தாக்கி புள்ளிகளைச் சேகரிக்க வேண்டும்.

**திறந்தவெளியில் வில் வித்தை:** இலக்கின் தூரமும் அளவும் மாறிக்கொண்டே இருக்கும்.

### வண்ணங்களும் புள்ளிகளும்

| | | |
|---|---|---|
| மஞ்சள் | – | 9, 10 |
| சிவப்பு | – | 7, 8 |
| நீலம் | – | 5, 6 |
| கறுப்பு | – | 3, 4 |
| வெள்ளை | – | 1, 2 |



### பிரபலமான வீரர்கள்

காமன்வெல்த் போட்டியில் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்ற தீபிகா குமாரி இந்தியாவின் முக்கியமான வில்லாளர்களில் ஒருவர்.

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மோட்டார் மன்னன்

**ஒரு வண்டி மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. அதை மாடும் இழுக்கவில்லை; குதிரையும் இழுக்கவில்லை. தானாகவே அது நகர்ந்து வந்தது. அதைப் பார்த்த ஒரு சிறுவனுக்கு வியப்பாக இருந்தது.**



அந்த வண்டியை ஓட்டி வந்தவரிடம் "ஐயா, மன்னித்துக் கொள்ளுங்கள். இதற்குமுன் நான் இது மாதிரி வண்டியைப் பார்த்ததே இல்லை. எப்படி இது தானாக ஓடுகிறது?" என்று கேட்டான்.

அவர், "இங்கு ஒரு சாலை போடப் போகிறார்கள். அதற்காகத்தான் இதை ஓட்டிச் செல்கிறேன். இதன் பெயர் 'ரோடு என்ஜின்'. நீராவியால் இது ஓடுகிறது" என்றார்.

சிறுவன் உடனே வண்டியிலிருந்த பல பகுதிகளையும் கூர்ந்து கவனித்தான். "இது எப்படி வேலை செய்கிறது? மணிக்கு எத்தனை மைல் தூரம் ஓடும்?" என்று பல கேள்விகளைக் கேட்டு பதிலைத் தெரிந்துகொண்டான்.


இதேபோல மனிதர்களை ஏற்றிக்கொண்டு வேகமாகச் செல்லும் ஒரு வாகனத்தைச் செய்ய வேண்டும் என்கிற ஆசை அந்தச் சிறுவனுக்கு உண்டானது. அடிக்கடி அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான்.

பதின்மூன்றாவது வயதில் கடிகாரங்களைப் பழுது பார்க்க அவன் கற்றுக் கொண்டான். ஓடாத எந்தக் கடிகாரத்தைக் கொடுத்தாலும், மிக எளிதாகப் பழுது பார்த்துவிடுவான். ஒரே ஆண்டில் 300க்கும் மேற்பட்ட கடிகாரங்களை அவன் பழுது பார்த்திருக்கிறான்!

எல்லோரும் அவனுடைய திறமையைப் பாராட்டினார்கள். ஆனாலும், அவனுடைய அப்பாவுக்கு அவன் செய்கை பிடிக்கவில்லை. அவர் ஓர் உழவர். தன்னைப் போலவே தன் மகனும் உழவனாக வேண்டும் என்றே விரும்பினார்.

அவன் ஓர் எந்திரத் தொழிற்சாலையில் சேர்ந்தான். பகலில் தொழிற்சாலையில் வேலை செய்வான். இரவில் வேகமாக ஓடும் வண்டியை எப்படிக் கண்டுபிடிப்பது என்று ஆராய்ச்சி செய்வான். பல நாட்கள் முயன்றான். கடைசியில் அவன் முயற்சி வெற்றி பெற்றது.

1893ஆம் ஆண்டு அவன் ஒரு மோட்டார் வண்டியைக் கண்டுபிடித்தான். பிறகு, சொந்தமாக ஒரு மோட்டார் கம்பெனியைத் தொடங்கினான். ஆயிரக்கணக்கான மோட்டார்களைச் செய்தான். உலகம் எங்கும் அவன் மோட்டார்கள் சென்றன. நல்ல கிராக்கி ஏற்பட்டது. லட்சம் லட்சமாக அவன் சம்பாதித்தான். ஏழை உழவனின் மகனாய்ப் பிறந்த அவன், உலகிலேயே மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவன் ஆனான். 'மோட்டார் மன்னன்' என்று உலகமே அவனைப் புகழ்ந்தது.



அவன் ஏற்படுத்திய மோட்டார் கம்பெனியில் இப்போது 300 பிரிவுகள் இருக்கின்றன. அந்தக் கம்பெனிக்குச் சொந்தமாக, பல இரப்பர் தோட்டங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள், சாமான்களை ஏற்றிச் செல்லத் தனி இரயில் பாதைகள் எல்லாம் இருக்கின்றன!

அவன் கம்பெனியில் தயாரான மோட்டார் கார்கள் உலகப் புகழ்பெற்றன. 'போர்ட் மோட்டார்' (Ford Motor) என்ற பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்களே! ஹென்றி போர்ட் என்ற அமெரிக்கச் சிறுவனின் விடாமுயற்சி வெற்றி பெற்றது என்பதையே அந்த மோட்டார் நமக்கு எடுத்துக்காட்டுகிறது!


ஹென்றி போர்ட்

– அழ.வள்ளியப்பா

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# கழுதைப்புலி



- ஓநாயைப் போல இருக்கும் கழுதைப்புலியின் உடலில் புலிக்கு இருப்பதுபோலப் பட்டைகள் இருக்கும். சிலவற்றின் உடலில் புள்ளிகளும் கலந்து இருக்கும். இதனால் இதற்குக் கழுதைப்புலி (Hyena) என்று பெயர் வந்தது.
- இதன் பின்னங் கால்களை விட முன் கால்கள் நீளமானவை.
- புலியைப் போல் உடலும் கழுதையைப் போல கால்களும் இருப்பதால் இவ்விலங்கு கழுதைப் புலி என்று அழைக்கப்படுகிறது.
- மலை, கணவாய்ப் பகுதிகளில் வாழும் இவை பார்ப்பதற்கு ஓநாயைப் போல இருக்கும்.
- இறந்துபோன விலங்குகளின் உடல்களையும், புலி, கரடி போன்ற விலங்குகள் தின்ற பின் எஞ்சிய இறைச்சியையும் கழுதைப்புலிகள் தின்னும்.
- பசு, எருமை ஆகியவற்றின் உறுதியான எலும்பைக்கூட கடித்து முறித்துவிடும் அளவிற்கு வலிமையான தாடையும் பற்களும் இவற்றிற்கு அமைந்துள்ளன.



- கழுதைப்புலிகள் கூட்டமாகச் சேர்ந்து வாழும் பழக்கம் உடையவை. அக்கூட்டத்திற்குப் பெண் கழுதைப்புலியே தலைமை தாங்கும்.
- உலகில் மொத்தமாக நான்கு வகையான கழுதைப்புலிகள் உள்ளன. இந்தியாவில் காணப்படும் கழுதைப்புலிகளுக்கு உடலில் வரிகள் இருக்கும்.
- இந்தியா, தென்மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்கா வனப்பகுதிகளில் இவை அதிகமாக வாழ்கின்றன.
- காடுகளில் இறந்து கிடக்கும் பெரும்பான்மையான விலங்குகளின் உடல்களை இவை தின்று சுத்தம் செய்வதால் இவற்றைக் 'காட்டின் துப்புரவாளர்' என அழைக்கின்றனர்.
- கழுதைப்புலிகள் பெரும்பாலும் இரவு நேரத்தில் மட்டுமே கூட்டமாக வேட்டையாடும் பழக்கம் கொண்டவை.
- இது எழுப்பும் ஒலி கேட்போரை நடுங்கச் செய்யும். கழுதைப்புலி தனியாகக் காணப்பட்டாலும், இரையைக் கண்டவுடன் ஒலி எழுப்பி கழுதைப்புலி கூட்டத்தை வரவழைத்துவிடும்.
- தமிழ்நாட்டின் சத்தியமங்கலம் வனப்பகுதிகள், முதுமலைக் காடுகள், சிகூர் சமவெளி, நீலகிரி வனச்சரகம் உள்ளிட்ட சில காடுகளில் இவை காணப்படுகின்றன.


-ஜூலியட்

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை அளித்த மாபெரும் விளையாட்டு மேடை



மாற்றுத் திறனாளி மாணவர்களின் அசாத்தியமான விளையாட்டுத் திறமை

1. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலானவிளையாட்டுப் போட்டிகள் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றன.
2. குண்டு எறிதல், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், ஓட்டப் பந்தயம் எனப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.
3. வெற்றி பெற்ற மாணவர்கள் சான்றிதழ்களையும், பதக்கங்களையும் பெற்று மகிழ்ந்தனர்.

**மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற வாழ்த்துகிறோம்..**

## 'தேன்சிட்டு' சிறார் இதழ்

**உங்கள் இல்லம் தேடி வர வேண்டுமா?**

மாணவப் படைப்பாளிகள் உருவாக்கிய கதை, கட்டுரை, பாடல், விடுகதை, ஓவியங்கள் என இதழில் சுவாரசியமான பகுதிகள் இடம்பெற்று வருக்கின்றன.

## தேன்சிட்டு இதழின் சந்தாதாரர் ஆக



இந்த QR-Code ஐ ஸ்கேன் செய்து தேன்சிட்டு இதழை உங்கள் குடும்பத்தோடு படித்து மகிழுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் கொடுக்கும் சிறந்த பரிசு இது.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



Then Chittu Fortnightly Registered with RNI No. TNTAM/2022/82345
Postal Registration No. TN/CH(C)/599/2022-2024
Licensed to Post Without Prepayment No. TN/PMG(CCR)WPP-678/22-24
Published on 01st & 16th of every month
Posted between 16-20 December 2023 Posted at Egmore RMS/ Patrika Channel


இதழ் 26



18

**ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்**

அமெரிக்கத் திரைப்பட இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் (Steven Spielberg). ஹாலிவுட் பட உலகில் பல புதுமையான முயற்சிகளில் முன்னோடி ஆவார். சிறந்த இயக்குநருக்கான ஆஸ்கர் விருதை மூன்று முறை பெற்றுள்ளார்.




24

**சார்லஸ் பாபேஜ்**

கணினியின் தந்தை என அழைக்கப்படுபவர். இங்கிலாந்தைச் சேர்ந்த கணிதவியலாளர் சார்லஸ் பாபேஜ். இயந்திர பொறியாளராகவும் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளார். இவர் 1882ஆம் ஆண்டு வித்தியாச பொறி என்ற புதிய கண்டுபிடிப்பைத் தோற்றுவித்தார். இதுவே தற்காலக் கணினியின் அடிப்படைத் தத்துவம்.

# டிசம்பர் 2023

## பிறந்த நாட்கள்



22

உலகமே வியந்து பார்க்கும் கணித மேதை சீனிவாச ராமானுஜன். தமிழ்நாட்டில் பிறந்த இவர், கணிதத்தில் பல்வேறு சாதனைகளைச் செய்தார். மேல்படிப்புக்காக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கு இவரின் கணிதத் திறமையைக் கண்டு பலரும் வியந்து போனார்கள். இவரின் பிறந்த நாளில்தான் நாடு முழுவதும் உள்ள பள்ளி, கல்லூரிகளில் தேசிய கணித தினமாகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**முகம்மது ரஃபி**

இந்தியத் திரையிசையில் வித்தியாசமான தனது குரலால் அனைவரையும் வசீகரித்த பாடகர். இந்தி, உருது உள்ளிட்ட மொழிகளில் 26 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியவர். இவருக்கு இந்திய அரசு பத்மஸ்ரீ விருது அளித்துக் கௌரவித்துள்ளது.



24

DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

**2023**

## நிகழ்வுகள்



**தேசிய சிறுபான்மையினர் உரிமை தினம் டிசம்பர். 18**

1992ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் தேதியை ஐக்கிய நாடுகள் சபை மதம், மொழி மற்றும் இன ரீதியான சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த தனிநபர் உரிமை குறித்த உடன்படிக்கையைப் பிரகடனம் செய்தது. நாட்டில் சிறுபான்மை இனங்களில் உள்ள மக்களின் உரிமையைப் பாதுகாப்பதும், உறுதிப்படுத்துவதுமே இதன் முக்கிய நோக்கமாகும்.



**தேசிய விவசாயிகள் தினம் டிசம்பர். 23**

விவசாயிகளின் தேசிய பங்களிப்பைச் சொல்லும் விதத்தில் விவசாயிகள் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. முன்னாள் இந்திய பிரதமர் சவுத்ரி சரண் சிங் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். அவரின் பிறந்த நாளே தேசிய விவசாயிகள் தினமாக அறிவிக்கப்பட்டது.

**தேசிய நுகர்வோர் உரிமை தினம் டிசம்பர். 24**



1986ஆம் ஆண்டு இதே நாளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததையடுத்து இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது. நுகர்வோர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதற்காக இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

தேன்சிட்டு
இதழ் பிடித்திருக்கிறதா?
நீங்களும் படைப்புகளை அனுப்பலாம்
முகவரி: ஆசிரியர், தேன்சிட்டு, ஈ.வி.கே. சம்பத் மாளிகை, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரிச்சாலை, சென்னை - 6
மின்னஞ்சல் : thenchittu@tnschools.gov.in

Publisher & Editor: C. Amuthavalli, Printer: B. Rajkumar, Printed at Rasi Graphics Private Limited, 69-71/A, SIDCO Industrial Estate, Thirumazhisai, Tiruvallur district, PIN code – 600124. Published at Tamilnadu Text Book and Educational Services Corporation, EVK Sampath Maligai, No. 68, College Road, Chennai – 600 006.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com